**செய்தி வெளியீடு எண் : 1814** **நாள் : 15.10.2022**

**செய்தி வெளியீடு**

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் –15.10.2022

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக இன்று (15.10.2022) சென்னை இராயப்பேட்டையில் உள்ள, புதுக்கல்லூரி வளாகத்தில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வேலைவாய்ப்பிற்கான நேர்காணல் நடைபெற்ற அரங்குகளையும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் செயல்பாடுகளை விளக்கும் காட்சிக்கூடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். தனியார் துறையில் பணிவாய்ப்பு பெற்ற ஒரு இலட்சமாவது வேலைநாடுநர் உள்ளிட்ட வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது பொற்கரங்களால் வழங்கி விழா பேருரை ஆற்றினார்கள்.

இம்முகாமில் 389 தனியார்துறை வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டனர். 21,623 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டதில் 26 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 2,742 வேலைநாடுநர்கள் பணிநியமனம் பெற்றனர். மேலும் இம்முகாமில் முதல்கட்ட நேர்முகத்தேர்வில் 2,477 நபர்கள் தேர்ச்சிபெற்று இரண்டாம் கட்ட தேர்வுக்கு தகுதிப்பெற்றனர். அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்காக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 726 ஆகும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள். MEASI நிறுவனங்களின் தலைவர் அவர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மேலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., அவர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in